947

# EASY SELECTIONS

FROM

# TAMIL POETRY

(*WITH NOTES*)

**JUNIOR**

*Part I—For Second Class*

1 AUG 1923

# பால நீதிச் செய்யுள் நூற்றிரட்டு

[உரையுடன்]

ஜூனியர்

(முதற்பகுதி—இரண்டாவது வகுப்புக்கு)

TS
031,lx 20
M23
177215

…LLAN AND CO., LIMITED
… BOMBAY, CALCUTTA AND LONDON

Price 1½ Annas] [விலை, 1½ அணா.

திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

## இயற்கை விளக்க வாசகங்கள்.

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிது சிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேல் நாட்டுப்பள்ளிக்கூடங்களில், பாலர் வகுப்புமுதற்கொண்டே இயற்கைஞானம் கற்பிக்கப்படுவது அவசியமாய் விட்டது. நம் நாட்டிலும் பிள்ளைகள் அறிவில் சிறந்து வளர்ந்து தம் நாட்டுக்கும் தங்களுக்கும் உபகாரிகளாவதென்றால், நம் பள்ளிக்கூடங்களிலும் இயற்கை ஞானம் போதிப்பது அவசியமாதல் வேண்டும். பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து, காலஞ்சென்ற திவான் பஹதூர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் இயற்கை விளக்க வாசகங்கள் என்ற தொகுதியில் பல பாட புஸ்தகங்கள் எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்தியார்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனால் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கை ஞானமும் போதனாமுறையும் மிக விருத்தியடைந்துள்ளபடியால், அவ்விருத்தியை அனுசரித்து அவை யாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| முதற் புஸ்தகம் .. ... ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் புஸ்தகம் ... ... ... | 0 | 5 | 0 |
| மூன்றாம் புஸ்தகம் ... ... ... | 0 | 5 | 0 |
| நான்காம் புஸ்தகம் ... ... ... | 0 | 5 | 0 |
| ஐந்தாம் புஸ்தகம் ... ... ... | 0 | 8 | 0 |

திவான் பஹதூர்: ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ்—லண்டன்: எம். ஆர். ஏ. எஸ்—லண்டன்.

தொகுத்த

## தமிழ் இலக்கியத் திரட்டு.

ஒரு நாட்டாரின் நாகரிக விருத்தியை அளவிட்டறியச் சாதனமாயிருப்பது அந்நாட்டாரின் இலக்கியமே. நம் தமிழ்நாட்டு முற்கால இலக்கியம், பிறநாட்டு முற்கால இலக்கியங்களுக்குப் பின் வாங்காத பெருமையும் அருமையும் உடையதாயிருக்கிறது. ஆயினும், அது தற்கால மாணவர்க்குப் பயன்படும் வகையில் சிறு சிறு பகுதிகளாகத் திரட்டிக்கொடுப்பதே இத்தொகுதியின் நோக்கம். இதில் இதுகாறும் இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன.

பகுதி I. (14 வசனபாடங்கள், 12 செய்யுட்பாடங்கள்)..0 12 0
பகுதி II. (15 வசனபாடங்கள், 8 செய்யுட்பாடங்கள்)..0 8 0

# EASY SELECTIONS
FROM
# TAMIL POETRY

[*WITH NOTES*]

**JUNIOR**

*Part I—For Second Class*

11 AUG 1923

---

# பால நீதிச் செய்யுள்
# நூற்றிரட்டு

உரையுடன்

ஜூனியர்

(முதற்பகுதி—இரண்டாவது வகுப்புக்கு)

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்

சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்.

1923

[ரிஜிஸ்தர் செய்தது]

சென்னை-600 008.
127245
170-G)
182

உள்ளுறை.

1. உலக நீதி

2. ஆத்திசூடி

(ஔவையார் அருளிச் செய்தவை)

# உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.

(பதவுரை.) ஒருநாளும்-ஒருபோதும், ஓதாமல்-(நீ)படிக்காமல், இருக்கவேண்டாம்-இராதே.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) ஒருவரையும்-ஒருவரைப்பற்றியும், பொல்லாங்கு-குற்றங்களை, சொல்லவேண்டாம்-(நீ) சொல்லாதே.

3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

(ப-ரை.) ஒருநாளும்-ஒருபோதும், மாதாவை - (உன்)தாயை, மறக்கவேண்டாம்-(நீ) மறக்காதே.

4. வஞ்சனைகள் செய்வாரோ
டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) வஞ்சனைகள்-வஞ்சனையான காரியங்களை, செய்வாரோடு-செய்கின்றவர்களுடனே,இணங்கவேண்டாம்-(நீ எப்பொழுதும்) சேராதே.

5. போகாத இடந்தனிலே
போக வேண்டாம்.

(ப-ரை.) போகாத-போகத்தகாத, இடந்தனிலே-இடத்துக்கு, போகவேண்டாம்-(நீ எப்பொழுதும்) போகாதே.

6. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) போகவிட்டு-(ஒருவர்) போனபின்பு, புறம்சொல்லி-அவர்மீது பழிச்சொற்களைச் சொல்லி, திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

### 7. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) நெஞ்சுஆர-மனம் அறிய, பொய்தன்னை-பொய்யை, சொல்லவேண்டாம்-(நீ எப்பொழுதும்) சொல்லாதே.

### 8. நிலைஇல்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்.

(ப-ரை.) நிலை இல்லா(த)-உறுதி இல்லாத, காரியத்தை-விஷயத்தை, நிறுத்தவேண்டாம்-உறுதிப்படுத்தாதே.

### 9. நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.

(ப-ரை.) நஞ்சுடனே-விஷத்தை உடைய பிராணிகளோடு, ஒருநாளும்-ஒருபோதும், பழகவேண்டாம்-(நீ) பழகாதே.

### 10. நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) நல்இணக்கம்-நல்ல சகவாசம், இல்லாரோடு-இல்லாதவர்களுடனே, இணங்கவேண்டாம் - (நீ எப்பொழுதும்) சிநேகம் செய்யாதே.

### 11. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.

(ப-ரை.) தனிவழி-(ஜனங்கள் நடக்காத) தனியான வழியில், அஞ்சாமல் - பயப்படாமல், போகவேண்டாம் - (நீ எப்பொழுதும்) போகாதே.

### 12. அடுத்தவரை யொருநாளும் கெடுக்க வேண்டாம்.

(ப-ரை.) அடுத்தவரை-உன்னைவந்து அடுத்தவர்களை, ஒருநாளும்-ஒருபோதும், கெடுக்கவேண்டாம் - (நீ)கெடுக்காதே.

### 13. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.

(ப-ரை.) மனம்போன-மனஞ்சென்ற, போக்கு எல்லாம்-வழிகளில் எல்லாம், போகவேண்டாம்-(நீ) போகாதே.

14. மாற்றானை உறவென்று
நம்ப வேண்டாம்.

(ப-ரை.) மாற்றானை - பகைவனை, உறவு என்று - பந்து என்று எண்ணி, நம்பவேண்டாம்-(நீ அவனை) நம்பாதே.

15. தனம்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.

(ப-ரை.) தனம்தேடி-பணத்தைச் சம்பாதித்து, உண்ணாமல்-(நீ) அநுபவிக்காமல், புதைக்கவேண்டாம்-புதைத்து வைக்காதே.

16. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

(ப-ரை.) தருமத்தை-புண்ணிய காரியத்தை, ஒருநாளும்-ஒரு போதும், மறக்கவேண்டாம்-(நீ) மறக்காதே.

17. சினம்தேடி அல்லலையும்
தேட வேண்டாம்.

(ப-ரை.) சினம்தேடி - கோபம்கொண்டு, அல்லலையும்-(அதன் பலனாகத்) துன்பத்தையும், தேடவேண்டாம்-(நீ) அடையாதே.

18. சினத்திருந்தார் வாசல்வழி
சேர வேண்டாம்.

(ப-ரை.) சினத்து-(உன்மேல்) கோபத்தோடு, இருந்தார்-இருப்பவர்களுடைய, வாசல்வழி- வீட்டினது வழியாகவும், சேரவேண்டாம்-நீ போகாதே.

19. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) குற்றம் ஒன்றும்-(பிறரிடமுள்ள குணத்தை விட்டுக்) குற்றத்தை மாத்திரம், பாராட்டி திரியவேண்டாம - எண்ணித் திரியாதே.

20. கொலைகளவு செய்வாரோ
டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) கொலை-கொல்லுதலையும், களவு-திருடுதலையும், செய்வாரோடு - செய்கின்றவர்களுடனே, இணங்கவேண்டாம் - (நீ) சேராதே.

21. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

(ப-ரை.) கற்றவரை-படித்தவர்களை, ஒருநாளும்-ஒருபோதும், பழிக்கவேண்டாம்-(நீ) பழிக்காதே.

22. கற்புடைய மங்கையரை
இகழ வேண்டாம்.

(ப-ரை.) கற்புடைய-கற்புள்ள, மங்கையரை-பெண்களை, இகழ வேண்டாம்-(நீ) இகழாதே.

23. கொற்றவனோ டெதிர்மாறு
பேச வேண்டாம்.

(ப-ரை.) கொற்றவனோடு-அரசனுடன், எதிர்-எதிரே நின்று, மாறு-விரோதமான சொற்களை, பேசவேண்டாம்-(நீ) பேசாதே.

24. கோயிலில்லா வூரிற்
குடியிருக்க வேண்டாம்.

(ப-ரை.) கோயில் இல்லா-கோயில் இல்லாத, ஊரில்-ஊரிலே, குடி இருக்கவேண்டாம்-(நீ) குடி இருக்காதே.

25. வாழாமல் பெண்ணைவைத்துத்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) பெண்ணை-உன் பெண்ணை, வாழாமல்-(தன் கணவனோடு) வாழாதபடி, வைத்து-(உன் வீட்டில்) வைத்துக்கொண்டு, திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

26. மனையாளைக் குற்றமொன்றும்
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) மனையாளை-உன் மனைவியின்மீது, குற்றம் ஒன்றும்-ஒரு குற்றமும், சொல்லவேண்டாம்-(பிறரிடம்) சொல்லாதே.

27. வீழாத படுகுழியில்
வீழ வேண்டாம்.

(ப-ரை.) வீழாத-வீழத் தகாத, படுகுழியில்-கொடியபள்ளத்திலே, வீழவேண்டாம்-(நீ) வீழாதே.

28. வெஞ்சமரில் புறங்கொடுத்து
மீள வேண்டாம்.

(ப-ரை.) வெம்சமரில்-கொடிய யுத்தத்திலே, புறங்கொடுத்து-முதுகுகாட்டி, மீளவேண்டாம்-(நீ) திரும்பி வந்துவிடாதே.

29. தாழ்வான குலத்துடனே
சேர வேண்டாம்.

(ப-ரை.) தாழ்வான-தாழ்வாகிய, குலத்துடனே-குடிகளோடு, சேரவேண்டாம்-(நீ) சேராதே.

30. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) தாழ்ந்தவரை-(செல்வம் கெட்டுத்) தாழ்வு அடைந்தவர்களை, பொல்லாங்கு-கெட்ட சொற்களால், சொல்லவேண்டாம்-(நீ) திட்டாதே.

31. வார்த்தை சொல்வார்
வாய்பார்த்துத் திரியவேண்டாம்.

(ப-ரை.) வார்த்தை சொல்வார்-(வீண்) பேச்சுகளைப் பேசுகின்றவர்களுடைய, வாய்பார்த்து-வாயைப் பார்த்துக்கொண்டு, திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

32. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

(ப-ரை.) மதியாதார் - (உன்னை) மதிக்காதவர்களுடைய, தலைவாசல்-(வீட்டின்) முன்வாசலையும், மிதிக்கவேண்டாம்-(நீ) மிதிக்காதே.

33. மூத்தோர்சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்

(ப-ரை.) மூத்தோர்-(அறிவில்) முதிர்ந்தவர்கள், சொல்-சொல்லுகின்ற, வார்த்தைதனை - சொற்களை, மறக்கவேண்டாம் - (நீ) மறக்காதே.

34. முன்கோபக் காரரோ
டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) முன்கோபக்காரரோடு - (நிதானிக்காமல் எதற்கும்) முன்னே கோபம் கொள்கின்றவர்களுடனே, இணங்கவேண்டாம்-(நீ) சேராதே.

35. வாத்தியார் கூலியை
வைத்திருக்க வேண்டாம்.

(ப-ரை.) வாத்தியார் கூலியை-உபாத்தியாயருடைய கூலியை, வைத்திருக்கவேண்டாம்-(நீ) கொடாமல் வைத்திராதே.

36. வழிபறித்துத் திரிவாரோ
டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) வழி-வழியிலிருந்து, பறித்து - (போவார் வருவாருடைய பொருள்களை) அபகரித்து, திரிவாரோடு-திரிகின்றவர்களுடனே, இணங்கவேண்டாம்-(நீ) சேராதே.

37. கருதாமல் கருமங்கள்
முடிக்க வேண்டாம்.

(ப-ரை.) கருதாமல்-நன்றாய் ஆலோசிக்காமல், கருமங்கள்-காரியங்களை, முடிக்கவேண்டாம்-(நீ) முடிக்காதே.

38. கணக்கழிவை யொருநாளும்
பேச வேண்டாம்.

(ப-ரை.) ஒரு நாளும்-ஒருபோதும், கணக்கு அழிவை-தப்புக் கணக்கை, பேசவேண்டாம்-(நீ) சொல்லாதே.

39. பொருவார்தம் போர்க்களத்திற்
போக வேண்டாம்.

(ப-ரை.) பொருவார்தம்-போர் செய்கின்றவர்களுடைய, போர்க்களத்தில்-யுத்தபூமிக்கு, போகவேண்டாம்-(நீ) போகாதே.

40. பொதுநிலத்தி லொருநாளும்
இருக்க வேண்டாம்.

(ப-ரை.) ஒருநாளும்-ஒருபோதும், பொது நிலத்தில்-பலருக்கும் பொதுவாகிய இடத்தில், இருக்கவேண்டாம்-(நீ) குடியிருக்காதே.

41. இருதாரம் ஒருநாளும்
தேட வேண்டாம்.

(ப-ரை.) ஒருநாளும்-ஒருபோதும், இருதாரம்-இரண்டு மனைவியரை, தேடவேண்டாம்-(நீ) கலியாணம் செய்துகொள்ளாதே.

42. எளியாரை யெதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

(ப-ரை.) எளியாரை-ஏழைகளை, எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்-(நீ) பகையாக்கிக் கொள்ளாதே.

43. சேராத இடந்தனிலே
சேர வேண்டாம்.

(ப-ரை.) சேராத - சேரத்தகாத, இடந்தனிலே - இடத்திலே, சேரவேண்டாம்-(நீ) சேராதே.

44. செய்தநன்றி ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

(ப-ரை.) செய்தநன்றி-(பிறர்) செய்த உதவியை, ஒருநாளும்-ஒருபோதும், மறக்கவேண்டாம்-(நீ) மறவாதே.

45. ஊரோடுங் குண்டுணியாய்த்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) ஊரோடும் - உன் ஊராருடனுனும், குண்டுணியாய்-கோள் சொல்கின்றவனாய், திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

46. உற்றாரை உதாசினங்கள்
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) உற்றாரை-உன் சுற்றத்தவரை,உதாசினங்கள் சொல்ல வேண்டாம்-(நீ) அலக்ஷியமாய்ப் பேசாதே.

47. பேரான காரியத்தைத்
தவிர்க்க வேண்டாம்.

(ப-ரை.) பேரான காரியத்தை-செய்ய வேண்டிய பெரிய காரியத்தை, தவிர்க்கவேண்டாம்-(நீ) தடுக்காதே.

48. பிணைபட்டுத்துணைபோகித்
திரிய வேண்டாம்.

(ப-ரை ) பிணைபட்டு-பிறர்க்கு உத்தரவாதியாகி, துணைபோகி-துணையாகி, திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

49. மண்ணினின்று மண்ணோரஞ்
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) மண்ணில் நின்று-பூமியில் இருந்து, மண்ணோரம்-பக்ஷபாதமான சொற்களை, சொல்லவேண்டாம்-(நீ) சொல்லாதே.

50. மனஞ்சலித்துச் சிலுகிட்டுத்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) மனம்சலித்து-மனஞ்சோர்ந்து, சிலுகு இட்டு-(பிறரோடு) சண்டை செய்துகொண்டு, திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

51. கண்ணழிவு செய்துதுயர்
காட்ட வேண்டாம்.

(ப-ரை.) கண்ணழிவுசெய்து-(பிறர் செய்யுங்காரியத்தை அவர்களுக்குத் தெரியாமல்) தடுத்து விட்டு, துயர்காட்ட வேண்டாம்-(அக்காரியங் கெட்டுவிட்டதற்காக) வருந்துகின்றவனைப்போல நடிக்காதே.

52. காணாத வார்த்தையைக்
கட்டுரைக்க வேண்டாம்.

(ப-ரை.) காணாத-(நீ நேரில்) அறியாத, வார்த்தையை-செய்தியை, கட்டுரைக்கவேண்டாம்-(நேரில் அறிந்தவனைப்போல) உறுதியாகச் சொல்லாதே.

53. புண்படவே வார்த்தைதனைச்
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) புண்பட-(பிறர் மனம்) புண்படும்படி, வார்த்தைதனை (கடுஞ்) சொற்களை, சொல்லவேண்டாம்-(நீ) சொல்லாதே.

54. புறஞ்சொல்லித் திரிவாரோ
டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) புறம்சொல்லி-(ஒருவருக்குப்) பின்னே (அவர்மேல்) பழிசொல்லி, திரிவாரோடு-திரிகின்றவர்களுடனே, இணங்கவேண்டாம்-(நீ) சேராதே.

55. மறம்பேசித் திரிவாரோ
டிணங்க வேண்டாம்.

(ப-ரை.) மறம்பேசி-வீரம்பேசிக்கொண்டு, திரிவாரோடு - திரிகின்றவர்களுடனே, இணங்கவேண்டாம்-(நீ) சேராதே.

56. வாதாடி வழக்கழிவு
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) வாதாடி-(பிறரோடு) வாதுசெய்து, வழக்கு அழிவு-தப்பு வழக்குகளை, சொல்லவேண்டாம்-(நீ) சொல்லாதே.

57. திறம்பேசிக் கலகமிட்டுத்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) திறம்பேசி-(உன்) வல்லமையைச் சொல்லி, கலகம் இட்டு-கலகஞ்செய்து, திரியவேண்டாம்-(நீ) திரியாதே.

58. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

(ப-ரை.) தெய்வத்தை - கடவுளை, ஒருநாளும் - ஒருபோதும், மறக்க வேண்டாம்-(நீ) மறக்காதே.

59. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

(ப-ரை.) இறந்தாலும்-செத்தாலும், பொய்தன்னை-பொய்யை, சொல்லவேண்டாம்-(நீ) சொல்லாதே.

60. ஏசலிட்ட வுற்றுரை
நத்த வேண்டாம்.

(ப-ரை.) ஏசல் இட்ட-திட்டிய, உற்றுரை-சுற்றத்தாரை, நத்த வேண்டாம்-(நீ) விரும்பாதே.

61. கூறுக்கி ஒருகுடியைக்
கெடுக்க வேண்டாம்:

(ப-ரை.) ஒருகுடியை-ஒரு குடும்பத்தை, கூறுஆக்கி-பிரித்து, கெடுக்கவேண்டாம்-(நீ) கெடுக்காதே.

62. தூறுக்கித் தலையிட்டுத்
திரிய வேண்டாம்.

(ப-ரை.) தூறுஆக்கி-(ஒருவர்மீது) பழியை உண்டாக்கி, தலை இட்டு - (அதை உறுதிப்படுத்துவதில் நீ) தலைஇட்டுக்கொண்டு, திரிய வேண்டாம்-திரியாதே.

# ஆத்திசூடி

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

(பதவுரை.) யாம்-நாங்கள், ஆத்தி - திருவாத்திப்பூமாலையை, சூடி-தரித்தவராகிய சிவபெருமான், அமர்ந்த-விரும்பிய, தேவனை-விநாயகக்கடவுளை, ஏத்தி ஏத்தி-பலமுறையும் துதித்து, தொழுவோம்-வணங்குவோம்.

1. அறஞ்செய விரும்பு.

(ப-ரை.) அறம்-தருமத்தை, செய-செய்ய, விரும்பு-(நீ) விருப்பம் கொள்ளு.

2. ஆறுவது சினம்.

(ப-ரை.) ஆறுவது-(உன்னுள்ளே)தணியவேண்டுவது,சினம்-கோபமே ஆகும்.

3. இயல்வது கரவேல்.

(பரை) இயல்வது - (உன்னால்) கொடுக்கக்கூடியதை, கரவேல்-(வறுமையினாலே உன்னிடம் வந்து இரப்பவர்களுக்கு நீ) ஒளியாதே.

4. ஈவது விலக்கேல்.

(ப-ரை) ஈவது-(ஏழைகளுக்குத் தருமமாக ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்-(நீ) தடுக்காதே.

5. உடையது விளம்பேல்.

(ப-ரை) உடையது-(உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்-(நீ பிறர் அறியும்படி) சொல்லாதே.

6. ஊக்கமது கைவிடேல்.

(ப-ரை.) ஊக்கமது-(செய் தொழிலில்) உற்சாகத்தை, கைவிடேல்-(நீ) கைவிடாதே.

7. எண்ணெழுத் திகழேல்.

(ப-ரை) எண்-கணித நூலையும்,எழுத்து-இலக்கண நூலையும், இகழேல்-(நீ) இகழாமல் கற்றுக்கொள். [எண்-தருக்கநூலும் ஆம்].

### 8. ஏற்ப திகழ்ச்சி.

(ப-ரை.) ஏற்பது-(ஒருவரிடத்திலே போய்) யாசிப்பது, இகழ்ச்சி-இழிவான காரியமாகும்.

### 9. ஐய மிட்டுண்.

(ப-ரை.) ஐயம்-பிச்சையை, இட்டு-(இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண்-(நீயும்) உண்ணு.

### 10. ஒப்புர வொழுகு.

(ப-ரை.) ஒப்புரவு-உலக நடையை அறிந்து, ஒழுகு-(நீ அதன் படி) நட.

### 11. ஓதுவ தொழியேல்.

(ப-ரை.) ஓதுவது-(படிக்கவேண்டிய நூல்களைப்) படிப்பதை ஒழியேல்-(நீ எப்போதும்) விடாதே.

### 12. ஔவியம் பேசேல்.

(ப-ரை.) ஔவியம்-பொறாமைச் சொற்களை, பேசேல்-(நீ ஒரு பொழுதும்) பேசாதே.

### 13. அஃகஞ் சுருக்கேல்.

(ப-ரை.) அஃகம்-தானியத்தை, சுருக்கேல்-(நீ அதிக லாபத்துக்காகக்) குறைக்காதே.

### 14. கண்டொன்று சொல்லேல்.

(ப-ரை.) கண்டு-(ஒன்றைப்) பார்த்து, ஒன்று-வேறொன்றை, சொல்லேல்-(நீ சாக்ஷியாகும்போது) சொல்லாதே.

### 15. ஙப்போல் வளை.

(ப-ரை.) ஙப்போல்-ஙகரம் (தான் வழங்குவதால் பிரயோஜனமுள்ளதாய் இருந்து வழக்கில்வாராத தன் வருக்கத்தைத் தழுவதல்) போல, வளை-(நீ பிரயோஜனமுள்ளவனாய் இருந்து உன் இனத்தவரைத்) தழுவு.

[ஙகரமானது அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என்று, சொல்லுக்குக் காரணமாய்வரும். அதின் வருக்கங்களாகிய ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ என்கிற பதினொன்றும், சொல்லுக்குக் காரணமாதலில்லை. ஆயினும் ஙகரத்தின் பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கிற் சேர்த்து வழங்குவார்கள். அது போலவே, நீ கல்வி செல்வங்களினால் பிறர்க்குதவி செய்வையாயின் அவர் உன்னைத் தழுவுவதன்றி உன்பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவரென்பது.]

### 16. சனி நீ ராடு.

(ப-ரை.) சனி-சனிக்கிழமைதோறும், நீர் ஆடு-(நீ எண்ணெய் இட்டுக்கொண்டு) வெந்நீரிலே தலைமுழுகு.

### 17. ஞயம்பட வுரை.

(ப-ரை.) ஞயம்பட-(பேசுஞ் சொல்லிலே) இன்பம் உண்டாகும்படி, உரை-(நீ யாவரோடும்) பேசு.

### 18. இடம்பட வீடெடேல்.

(ப-ரை.) இடம்-இடமானது, பட-(அளவுக்கு மேற்பட்டுப் பயனில்லாமற்) கிடக்கும்படி, வீடு-வீட்டை, எடேல்-(நீ பெரிதாகக்) கட்டாதே.

### 19. இணக்கமறிந் திணங்கு.

(ப-ரை.) இணக்கம்-சினேகிப்பவர்களின் குணங்களை, அறிந்து-ஆராய்ந்து தெரிந்துகொண்டு, இணங்கு-(பின் அவர்களோடு நீ) சினேகஞ் செய்.

### 20. தந்தைதாய்ப் பேண்.

(ப-ரை.) தந்தை-(நீ உன்) பிதாவையும், தாய்-மாதாவையும், பேண்-(எப்போதும்) காப்பாற்று.

### 21. நன்றி மறவேல்.

(ப-ரை.) நன்றி-(பிறர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல்-(நீ ஒருபோதும்) மறவாதே.

### 22. பருவத்தே பயிர்செய்.

(ப-ரை.) பயிர்-பயிர்களை, பருவத்தே-(அது அது விளையும்) காலத்திலே, செய்-(வேண்டும் முயற்சியிலே வழுவாமல் நீ) இடு.

### 23. மன்றுபறித் துண்ணேல்.

(ப-ரை.) மன்று-தருமசபையிலே இருந்துகொண்டு, பறித்து-(வழக்குத் தீர்ப்புக்கு வரும் குடிகளுடைய பொருளைக்) கவர்ந்து, உண்ணேல்-(நீ) ஜீவனம் பண்ணாதே.

### 24. இயல்பலா தனசெயேல்.

(ப-ரை.) இயல்பு அலாதன-(தருமவழிக்குத்) தகுதியல்லாத காரியங்களை, செயேல்-(நீ) செய்யாதே.

177245
600 008.

25. அரவ மாட்டேல்.

(ப-ரை.) அரவம்-(நஞ்சையுடைய) பாம்புகளை, ஆட்டேல்-(நீ) பிடித்து ஆட்டாதே.

26. இலவம்பஞ் சிற்றுயில்.

(ப-ரை.) இலவம்பஞ்சில்-இலவம்பஞ்சு மெத்தையிலே, துயில்-(நீ) நித்திரைசெய்.

27. வஞ்சகம் பேசேல்.

(ப-ரை.) வஞ்சகம்-கபடமான சொற்களை, பேசேல்-(நீ ஒருபோதும் சொல்லாதே.

28. அழகலா தனசெயேல்.

(ப-ரை.) அழகு அலாதன - (நீ துன்பப்படவந்த காலத்தும்) இழிவான செயல்களை, செயேல்-செய்யாதே.

29. இளமையிற் கல்.

(ப-ரை.) இளமையில்-இளமைப் பிராயத்திலே, கல்-(நீ) வித்தையைக் கற்றுக்கொள்.

30. அறனை மறவேல்.

(ப-ரை.) அறனை-(செய்யத்தக்க) தருமத்தை, மறவேல்-(நீ ஒருபோதும்) மறக்காமல் செய்.

31. அனந்த லாடேல்.

(ப-ரை.) அனந்தல்-நித்திரையை, ஆடேல்-(நீ அதிகமாகச்) செய்யாதே.

32. கடிவது மற.

(ப-ரை.) கடிவது-(ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற-(நீ) மறந்துவிடு.

33. காப்பது விரதம்.

(ப-ரை.) காப்பது-(உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே, விரதம்-நோன்பாகும்.

34. கிழமைப் படவாழ்.

(ப-ரை.) கிழமைப்பட-(உன்னிடத்தில் பிறருக்கும்) சொந்தம் உண்டாகும்படி, வாழ்-(நீ) வாழ்.

### 35. கீழ்மை யகற்று.

(ப-ரை.) கீழ்மை-கீழ்மையாகிய குணத்தை, அகற்று - (நீ) நீக்கு. [கீழ்மை-இழிவு].

### 36. குணமது கைவிடேல்.

(ப-ரை.) குணமது-(உன்னிடமுள்ள) நற்குணங்களை, கைவிடேல்-(நீ எப்போதும்) விட்டுவிடாதே.

### 37. கூடிப் பிரியேல்.

(ப-ரை.) கூடி-(நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல்-(நீ பின் அவரைவிட்டு) நீங்காதே.

### 38. கெடுப்ப தொழி.

(ப-ரை.) கெடுப்பது-பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி-(நீ எக்காலத்தும்) விட்டுவிடு.

### 39. கேள்வி முயல்.

(ப-ரை.) கேள்வி-(கற்றவர் சொல்லும் நூற்பொருளைக்) கேட்பதற்கு, முயல்-(நீ) முயற்சி செய்.

### 40. கைவினை கரவேல்.

(ப-ரை.) கைவினை-(உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல்-(நீ சமயத்திலே) ஒளியாதே.

### 41. கொள்ளை விரும்பேல்.

(ப-ரை.) கொள்ளை-(பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுதற்கு, விரும்பேல்-(நீ ஒருகாலத்தும்) ஆசைப்படாதே.

### 42. கோதாட் டொழி.

(ப-ரை.) கோது-குற்றம் பொருந்திய, ஆட்டு-விளையாட்டை, ஒழி(-நீ) நீக்கு.

### 43. சக்கர நெறி நில்.

(ப-ரை.) சக்கர நெறி-(அரசனுடைய ஆஞ்ஞையாகிய) சக்கரம் செல்லும் வழியிலே, நில்-(நீ அடங்கி) நில்.

### 44. சான்றோ ரினத்திரு.

(ப-ரை) சான்றோர்-அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து-கூட்டத்திலே, இரு-(நீ எந்நாளும் சேர்ந்து) இரு.

## 45. சித்திரம் பேசேல்.

(ப-ரை.) சித்திரம்- மெய்போலத் தோன்றும் பொய் மொழி களை, பேசேல்-(நீ எப்போதும்) பேசாதே.

## 46. சீர்மை மறவேல்.

(ப-ரை.) சீர்மை-(புகழுக்கு ஏதுவாகிய) நற்காரியங்களை, மற வேல்- நீ மறந்து விடாதே.

## 47. சுளிக்கச் சொல்லேல்.

(ப-ரை.) சுளிக்க - (கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல் லேல்-(நீ ஒன்றையும்) பேசாதே.

## 48. சூது விரும்பேல்.

(ப-ரை.) சூது-சூதாடலை, விரும்பேல்-(நீ ஒருபோதும்) விரும் பாதே.

## 49. செய்வன திருந்தச்செய்.

(ப-ரை.) செய்வன-செய்யுங் காரியங்களை, திருந்த-திருத்தமாக செய்-(நீ) செய்.

## 50. சேரிட மறிந்துசேர்.

(ப-ரை.) சேர் இடம்-அடையத்தகும் (நல்ல) இடத்தை, அறி ந்து-தெரிந்து, சேர்-(நீ)அடை.

## 51. சையெனத் திரியேல்.

(ப-ரை.) சை என-(பெரியோர் உன்னைச்) சீ என்று அருவருக் கும்படி, திரியேல்-(நீ கெட்டவனாய்த்) திரியாதே.

## 52. சொற்சோர்வு படேல்.

(ப-ரை.) சொல்-(நீ பிறரோடு பேசும்) சொற்களிலே, சோர்வு படேல்-மாதிபடப் பேசாதே.

## 53. சோம்பித் திரியேல்.

(ப-ரை.) சோம்பி-(நீ செய்யவேண்டும் முயற்சியைச் செய்யா மல்) சோம்பல்கொண்டு, திரியேல்-(வீணாகத்) திரியாதே.

## 54. தக்கோனெனத் திரி.

(ப-ரை.) தக்கோன் என-(உன்னைப் பெரியோர்கள்) யோக்கியன் என்று புகழும்படி, திரி-நீ நட.

## 55. தானமது விரும்பு.

(ப-ரை.) தானமது-(ஏழைகளுக்கு) தானம் செய்தலை, விரும்பு-(நீ) விரும்பு.

## 56. திருமாலுக் கடிமைசெய்.

(ப-ரை.) திருமாலுக்கு-விஷ்ணுவுக்கு, அடிமை செய்-(நீ) தொண்டு பண்ணு.

## 57. தீவினை யகற்று.

(ப-ரை.) தீவினை-பாவச்செயல்களை, அகற்று-(நீஎப்பொழுதுஞ் செய்யாமல்) நீக்கு.

## 58. துன்பத்திற் கிடங்கொடேல்.

(ப-ரை.) துன்பத்திற்கு-மனத்துயரத்திற்கு, இடம் கொடேல்-(நீ சிறிதும்) இடங்கொடாதே.

## 59. தூக்கி வினைசெய்.

(ப-ரை.) தூக்கி-(முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை-ஒரு தொழிலை, செய்-(நீ அதன் பின்பு) செய்.

## 60. தெய்வ மிகழேல்.

(ப-ரை.) தெய்வம்-கடவுளை, இகழேல்-(நீ எப்போதும்) இகழாதே.

## 61. தேசத்தோ டொத்துவாழ்.

(ப-ரை.) தேசத்தோடு-(நீ வசிக்கும்) தேசத்தி லுள்ளவர்களுடனே, ஒத்து-(மனம்) ஒத்து, வாழ்-(நீ) வாழ்.

## 62. தையல்சொற் கேளேல்.

(ப-ரை.) தையல்-(புத்தியில்லாத) ஸ்திரீகளுடைய, சொல்-(தீய) சொற்களை, கேளேல்-(நீ) கேட்காதே,

## 63. தொன்மை மறவேல்.

(ப-ரை.) தொன்மை-பழமையாகிய (சிநேகத்தை, மறவேல்-(நீ) மறந்துவிடாதே.

## 64. தோற்பன தொடரேல்.

(ப-ரை.) தோற்பன-தோல்வியடையக்கூடிய வழக்குகளிலே, தொடரேல்-(நீ) சம்பந்தப்படாதே.

## 65. நன்மை கடைப்பிடி.

(ப-ரை.) நன்மை-புண்ணியத்தையே, கடைப்பிடி-(எந்நாளும் விடாமல்) உறுதியாகப் பிடி.

## 66. நாடொப் பனசெய்.

(ப-ரை.) நாடு-உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன-ஒப்புக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய்-(நீ) செய்.

## 67. நிலையிற் பிரியேல்.

(ப-ரை.) நிலையில்-(நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலே நின்று, பிரியேல்-(ஒரு போதும்) நீங்காதே.

## 68. நீர்விளை யாடேல்.

(ப-ரை.) நீர்-(ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல் - (நீ நீந்தி விளையாடாதே.

## 69. நுண்மை நுகரேல்.

(ப-ரை.) நுண்மை-(நோயைத் தருகிற) சிற்றுண்டிகளை, நுகரேல்-(நீ) உண்ணாதே.

## 70. நூல்பல கல்.

(ப-ரை.) நூல்பல-(அறிவை வளர்க்கிற) நூல்கள் பலவற்றையும், கல்-(நீ மரணபரியந்தம்) படி.

## 71. நெற்பயிர் விளை.

(ப-ரை.) நெற்பயிர் நெல்லுப்பயிரை, விளை - (நீ வேண்டிய முயற்சி செய்து) விளைவி.

## 72. நேர்பட வொழுகு.

(ப-ரை.) நேர்பட-(உன் ஒழுக்கம் கோணாமல்) செவ்வைப்பட, ஒழுகு-(நீ) நட.

## 73. நைவினை நணுகேல்.

(ப-ரை.) நை-(பிறர்) கெடத்தக்க, வினை-தீவினைகளை, நணுகேல்-(நீ ஒருபோதும்) சாராதே.

## 74. நொய்ய வுரையேல்.

(ப-ரை.)நொய்ய-(பயன் இல்லாத) அற்பவார்த்தைகளை, உரையேல்-(நீ ஒருபோதும்) சொல்லாதே.

## 75. நோய்க் கிடங்கொடேல்.

(ப-ரை.) நோய்க்கு-வியாதிகளுக்கு,இடங்கொடேல்-(நித்திரை ஆகாரம் செய்தொழில் இவை மிகுதலும் குறைதலுமாகிய அவபத்தியங்களைச் செய்து நீ) இடங்கொடாதே.

## 76. பழிப்பன பகரேல்.

(ப-ரை.) பழிப்பன-(அறிவுடையவர்களாலே) பழிக்கப்படுவனவாகிய இழிசொற்களை, பகரேல்-(நீ) பேசாதே.

## 77. பாம்பொடு பழகேல்.

(ப-ரை.) பாம்பொடு - பாம்போடு, பழகேல்-(நீ) சகவாசஞ் செய்யாதே.

## 78. பிழைபடச் சொல்லேல்.

(ப-ரை.) பிழைபட-குற்றங்கள் உண்டாகும்படி, சொல்லேல்-(நீ ஒன்றையும்) சொல்லாதே.

## 79. பீடு பெறநில்.

(ப-ரை.) பீடு—பெருமையை, பெற பெறும்படியாக, நில்-(நீ நல்லவழியிலே) நில்.

## 80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.

(ப-ரை.) புகழ்ந்தாரை-(உன்னை அடுத்துத்) துதிசெய்தவரை, போற்றி-(கைவிடாமற்) காப்பாற்றி, வாழ்-(நீ) வாழ்.

## 81. பூமி திருத்தியுண்.

(ப-ரை.) பூமி-உன் விளைநிலத்தை,திருத்தி-சீர்திருத்திப் பயிர் செய்து, உண்-(நீ) உண்ணு.

## 82. பெரியாரைத் துணைக்கொள்.

(ப-ரை.) பெரியாரை-(அறிவிலே சிறந்த)பெரியோரை, துணைக்கொள்-(நீ உனக்குத்) துணையாகப் பேணிக்கொள்.

## 83. பேதைமை யகற்று.

(ப-ரை.) பேதைமை-(பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று-(நீ மெய்ஞ்ஞானத்திலே) போக்கு.

## 84. பையலோ டிணங்கேல்.

(ப-ரை.)பையலோடு-(துஷ்டத்தனமுள்ள)சிறுபிள்ளைகளோடு, இணங்கேல்-(நீ) கூடாதே.

## 85. பொருடனைப் போற்றிவாழ்.

(ப-ரை.) பொருள் தனை-திரவியத்தை,போற்றி-(மேன்மேலும் உயரும்படி) காத்து, வாழ்-(நீ) வாழ்.

## 86. போர்த்தொழில் புரியேல்.

(ப-ரை.) போர்-சண்டையாகிய,தொழில்-தொழிலை,புரியேல்-(நீ) செய்யாதே.

## 87. மனந்தடு மாறேல்.

(ப-ரை.) மனம்-மனதை, தடுமாறேல்-(யாதொரு விஷயத்திலும்) கலங்கும்படி (நீ) விடாதே.

## 88. மாற்றானுக் கிடங்கொடேல்.

(ப-ரை.) மாற்றானுக்கு - பகைவனுக்கு, இடம் கொடேல்-(உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ) இடங்கொடாதே.

## 89. மிகைபடச் சொல்லேல்.

(ப-ரை.) மிகைபட - (சொல்லவேண்டியதற்கு) அதிகமாக, சொல்லேல்-(நீ) பேசாதே.

## 90. மீதூண் விரும்பேல்.

(ப-ரை.) மீது ஊண்-அதிக போஜனத்தை, விரும்பேல்-(நீ உண்ண) விரும்பாதே.

## 91. முனைமுகத்து நில்லேல்.

(ப-ரை.) முனை முகத்து - சண்டைமுகத்திலே, நில்லேல்-(நீ போய்) நில்லாதே.

## 92. மூர்க்கரோ டிணங்கேல்.

(ப-ரை.) மூர்க்கரோடு-அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல்-(நீ) சிநேகம் பண்ணாதே.

## 93. மெல்லெனப் பேசு.

(ப-ரை.) மெல் என-(உரத்துக்கத்தாமல்) மெதுவாக, பேசு-(யாருடனும் நீ) பேசு.

## 94. மேன்மக்கள் சொற்கேள்.

(ப-ரை.) மேன் மக்கள் - மேன்மையாகிய மனிதருடைய, சொல்-சொல்லை, கேள்-(நீ) கேட்டு நட.

## 95. மைய லகற்று.

(ப-ரை.) மையல்-(எந்த விஷயத்திலும்)மயக்கம்(கொள்வதை), அகற்று-(நீ) நீக்கு.

## 96. மொழிவ தறமொழி.

(ப-ரை.) மொழிவது-(நீ) சொல்லும் பொருளை, அற-(சந்தேகம்) நீங்கும்படி, மொழி-சொல்லு.

## 97. மோகத்தை முனி.

(ப-ரை.) மோகத்தை-(நிலையாத பொருள்களின் மேல் உள்ள) ஆசையை, முனி-நீ வெறுத்து விலக்கு.

## 98. வல்லமை பேசேல்.

(ப-ரை. வல்லமை-(உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல்-(நீயே புகழ்ந்து) பேசாதே.

## 99. வாதுமுற் கூறேல்.

(ப-ரை.) வாது - வாதுகளை, முன் - (பெரியோர்) முன்னே, கூறேல்-நீ பேசாதே.

## 100. வித்தை விரும்பு.

(ப-ரை. வித்தை-கல்விப்பொருளையே, விரும்பு-நீ விரும்பிக் கற்றுக்கொள்.

## 101. வீடு பெறநில்.

(ப-ரை.) வீடு-மோக்ஷத்தை, பெற-அடையும்படி, நில்-(நீ அதற்குரிய ஞானவழியிலே) நில்.

## 102. உத்தம னாயிரு.

(ப-ரை.) உத்தமனாய்-(நற்குண நற்செய்கைகளினாலே எல்லோரிலும்) மேலானவனாகி, இரு-நீ இரு.

## 103. ஊருடன் கூடிவாழ்.

(ப-ரை.) ஊருடன்-ஊரவர்களுடனே, கூடி-(விரோதமின்றிக்) கலந்து, வாழ்-நீ வாழ்.

## 104. வெட்டெனப் பேசேல்.

(ப-ரை.) வெட்டு என-கத்தி வெட்டைப்போல, பேசேல்-(நீ ஒருவரோடுங் கடினமாகப்) பேசாதே.

## 105. வேண்டி வினைசெயேல்.

(ப-ரை.) வேண்டி-(உன் மனமார) விரும்பி, வினை-(தீய) காரியங்களை, செயேல்-(நீ ஒருபோதும்) செய்யாதே.

## 106. வைகறைத் துயிலெழு.

(ப-ரை.) வைகறை-(நீ தினந்தோறும்) விடியற்காலத்திலே, துயில்-நித்திரையை (விட்டு), எழு-எழுந்திரு.

## 107. ஒன்னாரைத் தேறேல்.

(ப-ரை..) ஒன்னாரை-பகைவர்களை, தேறேல்-(நீ ஒருபோதும்) நம்பாதே.

## 108. ஓரஞ் சொல்லேல்.

(ப ரை.) ஓரம்-பக்ஷபாதமான சொற்களை, சொல்லேல்-(நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

Printed at The Guardian Press, 158 B. Broadway Madras,

११२ / ११०

# South Indian Tamil Readers

## A NEW SERIES OF READING BOOKS

| | | | | |
|---|---|---|---|---|
| Reader | I | ... | ... | 2 As. 6 Ps. |
| ,, | II | ... | ... | 4 As. |
| ,, | III | ... | ... | 4 As. |
| ,, | IV | ... | ... | 6 As. |
| ,, | V | ... | ... | 6 As. |

This is quite a new series of Readers for children prepared under the auspices of the Tamil Academy by teachers who have had experience in inspecting the children of our elementary schools.

## தென்னிந்தியா வாசக பாடகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| வாசகம் | 1 | ... | ... | 2 அணு 6 பை |
| ,, | 2 | ... | ... | 4 ,, |
| ,, | 3 | ... | ... | 4 ,, |
| ,, | 4 | ... | ... | 6 ,, |
| ,, | 5 | ... | ... | 6 ,, |

இப்புத்தகங்கள் சிறு பிள்ளைகளுக்காக புதிதாய்த் தயார் செய்யப்பட்டன. தமிழ் அகடெமியின் ஆதரவில், எலிமெண்டரி பாடசாலை பிள்ளைகளைப் பற்றி அதிக அனுபவமுள்ள உபாத்தியாயர்களால் இவைகள் எழுதப்பட்டன.

17245
008.

## திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியர் இயற்றிய நீதி கதா கிருதிகள்.

'ஈஸாப் கதைகள்' என்று நீதி புகட்டும் பல சிறு கதைகள் வழங்கி வருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். அக் கதைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டவை. அவைகளின் அருமை பெருமைகளால் அவை இன்றும் அழியாமல் உலகம் முழுவதும் பிரபலமாய் வழங்கி வருகின்றன. அநேகமாய் முக்கியமான பாஷைகள் பலவற்றிலும் அவை மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவையாயிருக்கின்றன. ஆதலால், காலஞ்சென்ற திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், அக்கதைகளிற் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல கடிதத்தில் படங்களுடன் நீதி கதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிக்கப்பட்டுள்ளன. விலை, 4 அணா.

## பால நீதிச் செய்யுள் நூற்றிரட்டு.

ஔவையார், அதிவீரராம பாண்டியன் முதலிய முற்கால வித்வ சிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதி நூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக் கூடியவாறு தெளிவான எளிய நடையில், மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்களென்று மதித்திருக்கும் பல தமிழ் மக்கள் கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களாயிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக்குறைபாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதி நூல்களை, சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்து கொள்வதற்கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன் நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களால் அழகாக அச்சிடலாயிற்று. அந்நீதி நூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **முதற்படி (ஜூனியர்-Junior)** | | | |
| பகுதி-1. உலகநீதி, ஆத்திசூடி ... ... | 0 | 1 | 6 |
| பகுதி-2. கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை | 0 | 2 | 0 |
| பகுதி-3. வாக்குண்டாம், நல்வழி ... ... | 0 | 2 | 0 |
| **இடைப்படி (இண்டர்மீடியேட் Intermediate)** | | | |
| பகுதி-1. நீதிவெண்பா ... ... ... | 0 | 2 | 6 |
| பகுதி-2. நன்னெறி, இனிது 40, இன்னா 40 | 0 | 3 | 0 |
| **உயர்படி (ஸீனியர் Senior).** | | | |
| பகுதி-1. முதுமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம் | | 3 | 6 |
| பகுதி-2. திரிகடுகம், நான்மணிக்கடிகை ... | 0 | 5 | 0 |